**கவனிக்க.-** 2008.07.18 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1560 - 2008 ජූලි 25 වැනි සිකුරාදා - 2008.07.25

1560 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 756 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 762 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற்கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஓகத்து 01 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, யூலை 18 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக்கல்வி அபிவிருத்திச் செயல்திட்டம் {2197-SRI (SF) }

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி உதவி வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப அபிவிருத்திச் செயல்திட்டமானது வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. தொழில்நுட்பவியலாளர்கள், கைத்தொழில்நுட்பவியலாளர்களுக்கான வழங்கல்களுக்கும், கேள்விக்கும் இடையிலான வித்தியாசத்தை சீர் செய்வதற்கான அரசாங்கத்தின் மூலோபாயங்களுக்குப் பின்வருமாறு உதவி வழங்குவது செயற்றிட்டத்தின் நோக்கமாகும் :-

(1) தொழில்நுட்பவியல் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்காக தொழில்நுட்பவியல் கல்லூரிகளை (CoTs) வலுவூட்டல்.

(2) சந்தையின் கேள்வி நிலைமைகளுக்கேற்ப தொழில்நுட்பக் கல்வி, பயிற்சி (TEVT) கட்டமைப்பொன்றுக்கு உதவி வழங்குவதற்காக வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப்பயிற்சி அமைச்சையும் (MV&TT) சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் வலுவூட்டல் மற்றும்,

(3) தொழில்நுட்ப, தொழில்நுட்பவியல் கல்வி தொடர்பில் கவனஞ்செலுத்துகின்ற தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தை உருவாக்குதல் (Univotec).

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உதவி வழங்கப்பட்ட திறன் விருத்தி செயற்றிட்டத்தின் (SDP) ஏற்பாடுகளின் மூலம் விசேடமாக தேசிய தொழில்சார் தகைமைகளின் (NVQ) வட்டத்திற்குள் இச்செயற்றிட்டம் கட்டியெழுப்பப்படும்.

தேசிய தொழில்சார் தகைமைகள் 5-7 மட்டங்களை மைய மாகக்கொண்டு தரமான வினைத்திறன்மிக்க நிலையான தொழில் நுட்பக்கல்வி மற்றும் தொழில்பயிற்சியை விருத்திசெய்தல், உதவுதல் மற்றும் உறுதி செய்வதற்காக வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்கள் இச் செயற்றிட்டத்தின் மூலம் வலுவூட்டப்படுகின்றன.

தொழில்நுட்பக்கல்வி, தொழில் பயிற்சித்துறையின் தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும், மாணவர்களுக்கு தொழில்நுட்பக்கல்வி, தொழில்பயிற்சித் துறையில் ஈடுபடுவதற்கும், பட்டமொன்றைப் பெறுவதற்கான மாற்றுக்கல்விகளையும், தொழில்சார் பயண வழியொன்றை செய்து கொடுப்பதற்கும் தொழில்சார் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கும் அரசாங்கத்திற்கு இச்செயற்றிட்டம் உதவுகின்றது. ஏனைய பணிகளில் செயற்றிட்டத்தினால் தொழில்நுட்பக்கல்வியியல் பட்டதாரி (B. Tech. Ed.), தொழில்நுட்ப விஞ்ஞான பட்டதாரி (B. Tech.), போன்ற பட்டங்களுக்கான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதும், அவ்வேலைத் திட்டங்களை வழங்குகின்ற தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்களைக்கொண்ட நிறுவனங்களின் வசதிகளும் உபகரணங்களும் மேம்படுத்தப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட விடயப்பரப்புகளின் 5-6 ஆம் மட்டங்களின் தேசிய தொழில்சார் தகைமைகளை அடைந்து கொள்வதற்கு பயிற்சி பெறுவோருக்கு வசதிகளை செய்து கொடுப்பதனூடாக உத்தேச தொழில்நுட்பக் கல்லூரி மூலம் இத் துறைக்கு நேரடியாக உதவி வழங்கப்படும்.

2006 ஆம் ஆண்டு முதல் 5 வருட காலங்களுக்கு இச் செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

கொழும்பில் அமைந்துள்ள செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் பிரிவின் (P.L.U.) பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளான உரிய தகைமைமிக்க அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**செயற்திட்டப் பொறியியலாளர்** - 1 பதவி

**கடமைகளும் பொறுப்புக்களும் :**

(1) டிப்ளோமா மட்ட பயிற்சி வேலைத்திட்டங்களை மாகாண மட்டத்தில் நடத்துவதற்காக வேலைக்கூடங்களையும், ஏனைய வசதிகளையும் வடிவமைத்து விருத்தி செய்தலை/ மீள அமைத்தலை அமுலாக்கல்.

(2) சிவில் கட்டுமான செயற்பாடுகளில் அபிவிருத்தி/ மீளமைத்தலுக்கான கிரய மதிப்பீட்டையும் வரைபடங்களையும் தயாரித்தல்.

(3) ஒவ்வொரு CoTs க்கும் மாகாண மட்டத்தில் பராமரிப்பு திட்டத்தைத் தயாரித்தல்.

(4) உத்தேச தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கான உட்கட்ட மைப்பு வேலைகளுக்குரிய முதன்மைத் திட்ட மொன்றைத் தயாரித்தல்.

(5) உத்தேச தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கான கிரய மதிப்பீட்டுடன் கூடிய விவரமான அளவைப்பட்டியல் தயாரித்தல்.

(6) செயற்றிட்டத்தின் சிவில் கட்டுமான செயற்பாடுகளையும் கூர்ந்து மேற்பார்வை செய்து, தேவையான விதந்துரைகளை அனுமதிக்காக மேற்கொள்ளல்.

(7) சிவில் கட்டுமான செயற்பாட்டின் கொள்வனவு பிரிவில் வசதிகளை ஏற்படுத்தல்.

(8) செயற்றிட்ட பங்கேற்பு நிறுவனங்கள், பங்காளர் மற்றும் தேவையான ஏனைய பகுதியினர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல்.

(9) நன்கொடை வழங்கும் முகவராண்மைகள், PPI போன்ற வற்றினால் வேண்டப்படுவதற்கேற்ப அறிக்கை தயாரித்தல்.

**இப்பதவிக்கான தகைமைகளும் அனுபவமும்.**- அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் பட்டய/ இணைந்த அங்கத்துவம்/ பொருத்தமான பட்டப்பின் பட்டம் மற்றும் தகைமைகளைப் பெற்ற பின்னான ஆகக் குறைந்தது 8 வருட சிரேஷ்ட முகாமைத்துவ அனுபவம்

அல்லது

வகுப்பு 1 நிலையில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்துடன் பொருத்தமான துறையில் நாடளாவிய அரச சேவை அல்லது அதற்கு இணையான அந்தஸ்த்திலுள்ள வகுப்ப 1 உத்தியோகத்தர்.

**இப்பதவிக்கான வாண்மைத்துவ தேர்ச்சிகள் :**

(1) செயற்றிட்டத்திற்குத் தேவையானவாறு தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதும், செயற்றிட்டப்பணிப்பாளருக்கு உதவுவதும்.

(2) தேவையான நிபுணத்துவத்தை துறையின் உரிய செயற்றிட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு சுயமாக செயற்படுவதற்குள்ள ஆற்றல்.

(3) ஏனைய குழு உறுப்பினர்களின் நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும் உருவாக்கி குழு ரீதியான சூழலில் வினைத்திறனுடன் செயற்படும் ஆற்றல்.

(4) அமுல்படுத்துவதன் சிக்கல்களை பகுப்பாய்வு ரீதியாக ஆய்வு செய்து தீர்த்துவைக்கும் ஆற்றல்.

(5) கணனி தேர்ச்சி.

(6) எழுத்து மூலமான மற்றும் பேச்சுத்திறன் தொடர்பான ஆங்கில அறிவில் உயர் மட்ட நிபுணத்துவம்.

**வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதிக்கு விண்ணப்பதாரர்கள் 57 வயதுக்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும்.

**வேதனம்.**- தேர்வு நாடியின் தகுதிக்கும் அனுபவத்திற்கும் அமைவாகப் பேசித் தீர்மானிக்கப்படலாம். (முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல. 33/05.04.2007 இன் அடிப்படையில்.)

**பொது நிபந்தனைகள் :**

(1) ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியரினதும், சேவை வழங்குனரினதும் பங்களிப்பு முறையை சம்பளத்தில் 8% உம், 12% உம் ஆகுமென்பதுடன் ஊழியர் நம்பிக்கை நிதிக்காக (EPF) சேவை வழங்குனரின் பங்களிப்பு சம்பளத்தில் 3% ஆகும்.

(2) முழு நேரபதவிகளான இப்பதவிக்கு முதலாவது வருடக் காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்படுவதுடன் செயலாற்றுகையின் அடிப்படையில் வருடத்திற்கு வருடம் ஒப்பந்த காலம் நீடிக்கப்படும்.

(3) வெளிநாட்டு நிதி வழங்கப்படும் செயற்றிட்டங்களில் வேலை செய்த அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

தேவையான தகைமைகளைக்கொண்ட விண்ணப்பதாரர்கள் பொழிப்புரையாக அட்டவணைப்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர், முகவரிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரங்கள் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளின் நகல் பிரதிகளுடான விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2008, ஓகத்து 18 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்குத் தபாலில் அனுப்பப்பட்ட வேண்டும். கடித உறையின் மேற்புற இடது மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

செயலாளர்.

வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப்பயிற்சி அமைச்சு,
"நிபுணதா பியச",
354/2, அல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு 5,
2008, யூலை 04.

7-555

---

### விவசாயத் திணைக்களம்

விவசாய அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு

### பொருளியல் உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்

விவசாயத் திணைக்களத்தின் III ஆம் தர பொருளியல் உதவியாளர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.

3. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்.**- பொ. நி. சு. 06/2006 (iv) இல் MN-6-2006-A குறியீட்டின்படி : ரூபா 17,680 – 10 x 320 – 11 x 365 – 15 x 450 - ரூபா 31,645 ஆகும்.

4. இப்பதவிக்கு நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை/ அநாதை/ தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

5. இப்பதவிக்கு பொது நிர்வாக சுற்று நிரூபம் 07/ 2007 (1) ஏற்பாடுகளின் பிரகாரம் அரச மொழிக்கொள்கையை அமுல்படுத்தும் நோக்கில் இப்பதவிக்கு நியமனம் பெற்று 5 வருடங்களுக்குள்ளாக இப்பதவிக்குரித்தான இரண்டாவது அரச கரும மொழியில் புலமை பெறுதல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்.**- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பொருளியல்/ புள்ளிவிபரவியல்/ கணிதம் ஆகிய துறையொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட விஷேட பட்டம்.

(விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று சகல விண்ணப்பதாரிகளும் இங்கு குறிப்பிட்டுள்ள சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்).

7. **விண்ணப்பிக்கும் முறை.**- (i) விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்

படிவத்திற்கேற்ப 1-8 வரையான பந்திகள் முதல் பக்கத்தில் அடங்கும் வகையில் (A – 4 [21 cm x 29 cm] அளவு தாளொன்றில்) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்துடன் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(iii) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2008.08.15 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு விவசாயப் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம், த. பெ. எண் 1, பேராதனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுமேல் மூலையில் ‘‘பொருளியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்’’ எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் எவ்வித முன்னறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போனமை அல்லது ஏற்படும் தாமதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(v) ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்கள தலைவரூடாக அனுப்புதல் வேண்டும்.

8. அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரிகளைக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்துவதன் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(கலாநிதி) சீ. குடாகமகே,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
த. பெ. எண் 1,
பேராதனை,
2008.07.04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயத் திணைக்களம்**

பொருளியல் உதவியாளர் தரம் III பதவி

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
ஆங்கில தனி (கெபிற்றல்) எழுத்தில் (உ-ம்) SILVA, A. B.

2. முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) :-----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

4. நிரந்தர முகவரி (ஆங்கில தனி கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :-----.

5. பால் :-----.
ஆண் - 0, பெண் - 1 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

6. பிறந்த திகதி :-
வருடம் : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] நாள் : [ ][ ]

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :-
வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

8. விவாக நிலை :-
விவாகமானவர் - 1, தனியாள் - 2 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

9. கல்வித் தகைமைகள் :-----.
(i) பட்டம் :-----.
(ii) பல்கலைக்கழகம் :-----.
(iii) பட்டத்தில் அடங்கிய பாடங்கள் :-----.
(iv) பட்டம் செல்லுபடியாகும் திகதி :-----.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு குறிப்பிட்டுள்ள தகவல்களில் ஏதும் பிழையானவை அல்லது உண்மையற்றவை எனத் தெரிவு செய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்ற வனாவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் கண்டுபிடிக்கப் படின் நட்டஈடு எதுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

..................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

11. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்** (ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்) :

திரு./திருமதி/செல்வி .............................................................
...................................... என்பவர் ............................................
பதவியில் ............................ ஆந் திகதி முதல் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில்/ மாகாண சபையில் கடமையாற்றுகிறார் என உறுதி கூறுகின்றேன். இவர் மேற்கூறிய பதவிக்குத் தெரிவுசெய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து/சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

...........................................,
திணைக்களத் தலைவரின்/
அங்கீகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம்.

பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

7-604

## விவசாய அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு

விவசாயத் திணைக்களம்

### விதை தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல்

விவசாயத் திணைக்களத்தின் விதை தொழில்நுட்பவியலாளர் பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்**.- பொ. நி. சு. 06/2006 (iv) இல் MN-1-2006 குறியீட்டு இலக்கத்தின் கீழ் : ரூபா 12,920 – 120 x 10 – 140 x 11 – 210 x 11 – 290 x 10 - ரூபா 20,660 மாதச் சம்பள அளவுத்திட்டமொன்று உரித்தாகும்.

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை/ அநாதை/ தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

5. இப்பதவிக்கு பொது நிர்வாக சுற்று நிரூபம் 07/2007 (1) ஏற்பாடுகளின் பிரகாரம் அரச மொழிக்கொள்கையை அமுல்படுத்தும் நோக்கில் இப்பதவிக்கு நியமனம் பெற்று 5 வருடங்களுக்குள்ளாக இப்பதவிக்குரித்தான இரண்டாவது அரச கரும மொழியில் புலமை பெறுதல் வேண்டும்.

6. கீழ்க்காணும் அடிப்படைக் கல்வித் தகைமைகளையும் தொழில்சார் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும் :

6.1 **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாதவண்ணம் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். (இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

6.2 **தொழில்சார் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்** :

செயன்முறை விவசாய சான்றிதழ்,

அல்லது

குண்டசாலை, அங்குணுகொலபெலஸ்ஸ, பெல்வெஹரை, பிபிலை, லபுதுவ, வாரியப்பொல, வவுனியா, அநுராதபுரம், கரப்பிஞ்ச ஆகிய இலங்கை விவசாயக் கல்லூரிகளில் வழங்கப்படும் இரண்டுவருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

ஹாடி தொழில்நுட்ப நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்,

அல்லது

ஆக்வியினாஸ் கல்லூரியில் விவசாயத்திலான டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

உயர் கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்லூரிகளில் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றால் வழங்கப்படும் இருவருட விவசாய டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**கவனிக்க**.- விண்ணப்ப முடிவுத் திகதி அன்று சகல விண்ணப்பதாரிகளும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூரணப் படுத்தியிருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இவ் விண்ணப்பப்படிவம் ஏ–4 (21 cm x 29 cm) அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பாவித்து, 1-4 வரையான பந்திகள் முதல் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) முறையாக பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை 2008.08.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ''விவசாயப் பணிப்பாளர் நாயகம், தபால் பெட்டி இல. 1, விவசாயத் திணைக்களம், பேராதனை'' என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விதை தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் நிழற்பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஈ) முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப் படும். தபாலில் காணாமல் போனமை அல்லது ஏற்படும் தாமதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(உ) ஏற்கனவே அரச சேவையிலும் மாகாண அரச சேவையிலும் உள்ளவர்கள் விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

8. **சேர்த்துக்கொள்ளல் நடைமுறை**.- அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் நெறிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்துவதன் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(கலாநிதி) சீ. குடாகமகே,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
த. பெ. எண் 1,
பேராதனை,
2008.07.04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயத் திணைக்களம்**

விதை தொழில்நுட்பவியலாளர் பதவி

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : -----.
   உதாரணம் : SILVA, A. B.

   1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

   1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
   நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.

3. பால் :-
   ஆண் - 0, பெண் - 1 ☐
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

   3.1 பிறந்த திகதி :

   வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   3.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி யன்று வயது :-----.

   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. விவாக நிலை :-
   விவாகமானவர் - 1, தனியாள் - 2 ☐
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

5. கல்வித் தகைமைகள் (மொழிமூலத்துடன்) :
   (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| | முதல் அமர்வு | இரண்டாம் அமர்வு |
|---|---|---|
| ஆண்டும் மாதமும் : | .......................... | .............................. |
| சுட்டிலக்கம் : | .......................... | .............................. |
| மொழி மூலம் : | .......................... | .............................. |

| முதல் அமர்வு | |
|---|---|
| பாடம் | சித்தி |
| 1. .......................... | .................. |
| 2. .......................... | .................. |
| 3. .......................... | .................. |
| 4. .......................... | .................. |
| 5. .......................... | .................. |
| 6. .......................... | .................. |
| 7. .......................... | .................. |
| 8. .......................... | .................. |
| 9. .......................... | .................. |
| 10. .......................... | .................. |

| இரண்டாம் அமர்வு | |
|---|---|
| பாடம் | சித்தி |
| 1. .......................... | .................. |
| 2. .......................... | .................. |
| 3. .......................... | .................. |
| 4. .......................... | .................. |
| 5. .......................... | .................. |
| 6. .......................... | .................. |
| 7. .......................... | .................. |
| 8. .......................... | .................. |
| 9. .......................... | .................. |
| 10. .......................... | .................. |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :-

ஆண்டும் மாதமும் :..........................
சுட்டிலக்கம் :..........................
மொழி மூலம் : ..........................

| பாடம் | சித்தி |
|---|---|
| 1. .......................... | .................. |
| 2. .......................... | .................. |
| 3. .......................... | .................. |
| 4. .......................... | .................. |

6. தொழில்சார் தகைமைகள் :

| டிப்ளோமாவும் நிறுவனத்தின் பெயரும் | பரீட்சை இலக்கம் | சித்தியடைந்த ஆண்டு |
|---|---|---|
| | | |

7. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதி கூறுகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை இழப்பேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

8. ஏற்கனவே அரச சேவையிலுள்ள அலுவலர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ் அலுவலர் மேலே குறிப்பிட்டுள்ள விபரங்களைப் பரீட்சித்து அவை சரியானவை எனவும் இவ் விண்ணப்பதாரி மேற்கூறிய பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதிபெறின் அவரைத் தற்போது வகிக்கும் பதவியின் நின்றும் விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் சான்று பகர்கிறேன்.

.....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடல் வேண்டும்)

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

7-605

---

## தேர்தல்கள் திணைக்களம்

வரவேற்பு அலுவலர் பிரிவு

தேர்தல்கள் திணைக்களத்தின் மேற்குறித்த பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் ஈற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய ஏ4 அளவுடைய தாள்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2008, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கத்தக்கதாக "தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் திணைக்களம், சரண மாவத்தை, இராஜகிரிய" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பூரணமற்றதும் மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாததும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கக்கூடியதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வரவேற்பு அலுவலர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விண்ணப்பப்பத்திரங்களை உங்கள் நிறுவனத் தலைவர் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. **பதவிப் பெயர்**.- வரவேற்பு அலுவலர் பதவி

2. **கல்வி, வேறு தகைமைகள்**.- சிங்கள மொழி அல்லது இலக்கியம், கணிதம்/எண் கணிதம்/வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டிற்கான திறமைச்சித்திகள் உள்ளிட்ட 4 திறமைச் சித்திகளோடு 6 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா. த.) அல்லது அதற்குச் சமமான அல்லது அதனிலும் பார்க்க உயர்ந்த பரீட்சையொன்றில் சித்தியடைந்திருத்தல் :

(அ) ஆங்கிலம் பேசவும் எழுதவும் உள்ள ஆற்றல், தமிழ் மொழியறிவு என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

(ஆ) சிறந்த நடத்தையும் நல்ல சுக ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல்.

3. **தொழிற்றகைமைகள்**.- அரச அல்லது கூட்டுத்தாபனமொன்றில் குறித்த துறையில் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்தல் (அத்தாட்சிப்பத்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

4. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- அரசாங்க பொது நிருவாக 6-2006 (IV) ஆம் இலக்க சுற்றறிக்கையின் MNI-2006A சம்பள வகுதி இப்பதவிக்குரியதாகும் :-
ரூபா 13,120-10 x 145-11 x 170-10 x 240 - 10 x 320-ரூபா 22,040

5. **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவங்கள் கையேற்கப்படும் இறுதித் தினத்திற்கு விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்குக் கூடாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு கூடிய வயதெல்லை ஏற்புடையதாகா.)

6. **பதவியில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதாகவும் விளங்குவதோடு விதவை அனாதை ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பந்திகளின் ஏற்பாடுகள் இதனோடு தொடர்புடையனவாகும்.

(iii) பதவிக்கு நியமனம் பெற்றதன் பின்னர் 05 ஆண்டுகளுக்குள் 2007.05.28 ஆந் திகதிய 7/2007 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முறை**.- முறையான நேர்முகப் பரீட்சை ஒன்றை நடாத்தி அதில் அதிஉயர்ந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து பொருத்தமானவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

8. **வேறு விடயங்கள்**.- ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பதவி வகிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள அல்லது நிறுவனத் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் திணைக்களம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2008, யூலை 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேர்தல்கள் திணைக்களம்**

வரவேற்பு அலுவலர் பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
2. முழுப்பெயர் :————.
3. நிரந்தர முகவரி :————.
4. அஞ்சல் முகவரி :————.
5. தற்போதைக்கு சேவையிலிருப்பின் நிறுவனத்தின் பெயர் : ————.
முகவரி :————.
பதவி :————.
6. தேசிய ஆளடையாள அட்டை இல. :————.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. பால் :————.

8. பிறந்த திகதி :—

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2008.08.25 ஆந் திகதிக்கு வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. விவாக/விவாகமின்மை நிலை :————.

10. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. தரம்) :
ஆண்டு :————.

| பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |

(ஆ) க. பொ. த. (உயர் தரம்) :
ஆண்டு :————.

| பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |

11. வேறு தகைமைகள் :

(i) ..........................................................................................
(ii) ..........................................................................................
(iii) ..........................................................................................

12. உரிய துறையிலுள்ள அனுபவம் :

| நிறுவனம் | இருந்து | வரை |
|---|---|---|
| | | |

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.......................................................................... ஆகிய நான் மேற்குறித்த அனைத்து விடயங்களும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் வெளிப்படுத்துகின்றேன். இருந்தபோதிலும் மேற்குறித்த தகவல்கள் பொய்யானவையென அல்லது பிழையானவையென நிரூபிக்கப்பட்டால், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் உரிமை அற்றுப் போகுமெனவும் பதவிக்கு நியமனஞ் செய்யப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

14. **ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்குரிய திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பதாரியான திரு. ................................... என்பவர் தற்போதைக்கு இவ்வமைச்சின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் ........................................................................................ பதவியில் நிரந்தர/தற்காலிக/அமைய/பயிலுனர் அலுவலராக பணிபுரிகிறார் எனவும், அவர் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) உள்ளாக்கப்படவில்லை எனவும் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாதெனவும் அறிவிக்கின்றேன்.

————,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை).

பதவி :————.
அமைச்சு/திணைக்களம்/நிறுவனம் :————.
திகதி :————.

7-661

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சு**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

***ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் II "ஆ" வகுப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர், ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2008***

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் மேற்கூறிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில், மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.

*3.* ***இப்பதவிகளுக்கு பொது நிர்வாக சுற்றுநிருபம் 07/2008 இன் பிரகாரம் மாத சம்பள அளவுத்திட்டம்.*** *- ரூபா 15,005 – 4 x 180– 6 x 240 – 11 x 320 – 20 x 360 – ரூபா 27,885*

*4.* *இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை அனாதை/தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.*

*5.* *விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படை கல்வித் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும் :-*

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* | | *தொழிற் தகைமைகள்* |
|---|---|---|---|
| | *க. பொ. த. (சா. த.)* | *க. பொ. த. (உ. த.)* | |
| *விரிவாக்கல் உத்தியோகத்தர்*<br><br>*ஆராய்ச்சி உதவியாளர்* | *க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற் படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன், ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.* | *க. பொ. த. (உ. த.) ஒரே அமர்வில் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் அடங்கலாக மொத்தம் மூன்று (03) விஞ்ஞானப் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.* | *விவசாயத் திணைக் களத்தின் விவசாயக் கல்லூரிகளிலொன்றில் விவசாயத்திலான இரு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது ஹாடி தொழில்நுட்வியல் நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயத்திலான தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது திறன் அபிவிருத்தி தொழில்சார், தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி அமைச்சின் தொழில்நுட்பக் கல்லூரிகளால் வழங்கப்படும் இரு வருட விவசாயத்திலான தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (விவசாய விஞ்ஞானம்) சான்றிதழ் பெற்றிருத்தல். அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது மேற்கூறிய தகைமைகளுக்கு சமமானதென இலங்கை தொழில்நுட்பவியல் சேவைகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல்.* |

*6.* ***விண்ணப்பிக்கும் முறை.*** *- (அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பத்தை* A4 (21 cm x 29 cm) *அளவுடைய தாளொன்றை உபயோகித்து தயாரித்தல் வேண்டும். (விண்ணப்பத்தில் 1 முதல் 4 வரையான பந்திகள் கட்டாயமாக முன்பக்கத்தில் அடங்குதல் வேண்டும்.)*

(ஆ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

(இ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2008.08.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்/பதவிகளின் பெயர்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் "வருமானத் தலைப்பு 4000-20-03-20-13" க்கு வரவு வைத்து பரீட்சைக் கட்டணமாக ஒரு பதவிக்கு 300 ரூபாவும், இரண்டு பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் 450 ரூபாவும் நாட்டின் எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகமொன்றிலேனும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது.

(ஊ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போதல், தாமதமாகக் கிடைத்தல் தொடர்பாக திணைக்களம் பொறுப்பேற்காது.

(எ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது அரச சேவையில் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஏ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

**7. பரீட்சைக்குத் தோற்றுதல்.**- (அ) அனுமதி அட்டை.- விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) இப்பரீட்சை 2008, நவெம்பர் மாதமளவில் நடாத்தப்படும் பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னரேனும் தமது அனுமதி அட்டையைப் பெறாத விண்ணப்பதாரியொருவர் கீழ்வரும் விபரங்களுடன் உடனே "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்துடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும்.

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பத்தினை தபாலிட்ட திகதியும், பதிவு இலக்கமும், தபால் நிலையமும்
(v) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் மாவட்ட அல்லது பிரதேச செயலகமும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்பட மாட்டாது.

(ஈ) தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

(உ) பாடப்பரப்பு :

(i) விவேகப் பரீட்சை (விடய இல. 01) : (1 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள் :
பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத்திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான துறைசார் வினாக்களைக் கொண்டது.

(ii) *தொழில்நுட்பவியல்சார் வினாத்தாள் (விரிவாக்க உத்தியோகத்தர்) (விடய இல. 02) : (100 புள்ளிகள் - 2 மணித்தியால வினாத்தாள்)*

*பகுதி 01 – துறைசார் வினாப்பத்திரம் (காலம் : 1 மணித்தியாலம்)*
*பகுதி 02 – கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள் கொண்ட வினாத்தாள் (காலம் : 1 மணித்தியாலம்)*

(iii) *தொழில்நுட்ப வினாத்தாள் (ஆராய்ச்சி உதவியாளர்) (விடய இல. 03) : (100 புள்ளிகள் - காலம் : 02 மணித்தியாலம்)*

| *பதவி* | *தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு* |
|---|---|
| விரிவாக்கல் உத்தியோகத்தர் | 1. பொது விவசாயமும் கோட்பாடுகளும்<br>2. பயிர் உற்பத்தியும் கோட்பாடும், பயிராக்கவியல் விடயங்கள்<br>3. மண், உரம், பயிர்ப் போசணை, சூழற் பாதிப்புகள்<br>4. பயிர் இனப்பெருக்கல் முறைகள்<br>5. நோயும் பீடைக்காரணியும் அறிகுறிகளும் பாதிப்பும்<br>6. விவசாயக் கொள்கைகள், கடந்தகால, நிகழ்கால, எதிர்கால சாத்தியங்கள்<br>7. ஏற்றுமதி விவசாயப் பயிர்கள், மிளகு, கறுவா, கோப்பி, கொக்கோ, கராம்பு, ஏலம், சாதிக்காய், வெற்றிலை, பாக்கு என்பன தொடர்பான தாவரவியல் பண்புகள், காலநிலைக் காரணிகள், உரத் தாக்கமும் பயிர் போசணையும், நோயும் பீடையும், பின் அறுவடைத் தொழில்நுட்பம்<br>8. ஏற்றுமதி விவசாயப் பயிர் விற்பனையும் ஏற்றுமதிச் சாத்தியங்களும்<br>9. சேதனப் பயிர்ச்செய்கை<br>10. பண்ணை முகாமை, கன்றுகளும் நடுகைப் பொருட்களும் உற்பத்தி<br>11. விவசாய விரிவாக்கல் முறைகளும் விரிவாக்கவியலும் |
| ஆராய்ச்சி உதவியாளர் | (அ) விவசாயக் கோட்பாடுகள் :<br>1. இலங்கையில் காலநிலை வலயங்களும் பயிர் உற்பத்தியில் அதன் தாக்கமும்<br>2. மண் வகைகள், மண் பாதுகாப்பு, பயிர் போசணை, நீர்ப்பாதுகாப்பு<br>3. பீடைகளை இனங்காணல், வகைப்படுத்தல், கட்டுப்படுத்தல்<br>4. பயிர் இனப்பெருக்கம், நாற்றுமேடைப் பராமரிப்பு, இழைய வளர்ப்பு<br>5. விவசாயமும் சூழலும்<br>6. பெருந்தோட்டச் செய்கை, வயற் பயிர்ச்செய்கை, கலப்புப் பயிர்ச்செய்கை, விவசாயக் காட்டுச் செய்கை<br>7. பின் அறுவடைத் தொழில்நுட்பம்<br>8. ஏற்றுமதி விவசாயப் பயிரின் பொருள் வரையறை இனப்பெருக்கம், பராமரிப்பு, நோய்கள், பீடைக்கட்டுப்பாடு, அறுவடையைத் தயார்ப்படுத்தல், வயல் தாபித்தல், பராமரித்தல்<br>9. பண்ணை முகாமையும் திட்டமிடலும்<br><br>(அ) இலங்கையில் விவசாய அபிவிருத்தியுடன் தொடர்பான அரச, தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு<br>(ஆ) ஆய்வுகூட உபகரணங்களை இனங்காணுதல், அவற்றின் உபயோகமும் அடிப்படைத் தத்துவங்களும்<br><br>(i) ஆய்வுகூட கண்ணாடிப் பொருட்களை இனங்காணலும் உபயோகமும் சுத்தமாக்கலும்<br>(ii) இரசாயனப் பொருட்களை பாதுகாப்பான வகையில் பயன்படுத்தல், களஞ்சியப்படுத்தல் |

(ஊ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும்.

(எ) இப்பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

**8. சேவையில் அமர்த்தும் நியதிகள் :**

(I) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தீவின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராயிருத்தல் வேண்டும்.

(II) வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்களும் சேவை நிலையங்களும் பின்வருமாறு :-

*(அ) ஆராய்ச்சி உதவியாளர் :*

(i) கம்பஹா மாவட்டம் - வல்பிட்ட ஆராய்ச்சி நிலையம்
(ii) மாத்தறை மாவட்டம் - பலோல்பிட்டிய கறுவா ஆராய்ச்சி நிலையம்
(iii) மாத்தளை மாவட்டம் - மாத்தளை ஆராய்ச்சி நிலையம்

(ஆ) *விரிவாக்கல் உத்தியோகத்தர்.*- கீழ்வரும் மாவட்டங்களில் காணப்படும் விரிவாக்கல் உத்தியோகத்தர் பிரிவுகள் :-

(i) மொனராகலை
(ii) பதுளை
(iii) அம்பாந்தோட்டை
(iv) மாத்தறை
(v) காலி
(vi) இரத்தினபுரி
(vii) நுவரெலியா

9. **ஆட்சேர்ப்பு முறை.**- போட்டிப் பரீட்சைக்குரிய சகல வினாப்பத்திரங்களிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் திறமை ஒழுங்கு முறைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்திய விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட உயர் புள்ளிகளின் ஒழுங்குமுறைப்படி தகைமை பெற்றவர்கள் ஆட்சேர்ப்புக்கு தெரிவுசெய்யப்படுவர்.

10. இங்கு குறிப்பிடப்படாத வேறேதும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரி இறுதி முடிவெடுப்பார். சகல விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானியில் கூறப்பட்ட பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கேற்ப செயலாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

11. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதி, உரிய பரீட்சைக் கட்டணங்களை செலுத்தி குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படுவர்.

டபிள்யூ. டீ. எல். குணரத்ன,
பதில் ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர்.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை**

Application for competitive Examination for Recruitment to Vacancies in the Sri Lanka Technological Services in the Department of Export Agriculture

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

| | | |
|---|---|---|
| சிங்களம் | - | 2 |
| தமிழ் | - | 3 |
| ஆங்கிலம் | - | 4 |

விண்ணப்பிக்கும் பதவி :
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

| | | |
|---|---|---|
| விரிவாக்க உத்தியோகத்தர் | - | 1 |
| ஆராய்ச்சி உதவியாளர் | - | 2 |
| இரண்டு பதவிகளுக்கும் | - | 3 |

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்.) : ————.
(உதா : SILVA A.B)

1.2 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :————.

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :————.

2.1 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :————.

3. பால் :

ஆண் - 0
பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

3.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.2 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ?
(விவாகமானவர் - 2, விவாகமாகாதவர் - 1) ☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) :

பரீட்சையின் பெயர் :..........................................
ஆண்டும் மாதமும் :..........................................
பரீட்சை சுட்டெண் :..........................................
மொழிமூலம் :..........................................

| முதல் அமர்வு | |
|---|---|
| பாடங்கள் | தரம் |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

பரீட்சையின் பெயர் :..........................................
ஆண்டும் மாதமும் :..........................................
பரீட்சை சுட்டெண் :..........................................
மொழிமூலம் :..........................................

| இரண்டாம் அமர்வு | |
|---|---|
| பாடங்கள் | தரம் |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(ஆ) க. பொ. த. (உ. த.) :

ஆண்டும் மாதமும் :..........................................
பரீட்சை சுட்டெண் :..........................................
மொழிமூலம் :..........................................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(இ) தொழிற் தகைமைகள் :

| டிப்ளோமாவும் நிறுவனத்தின் பெயரும் | சித்தியெய்திய வருடம் | பரீட்சை சுட்டெண் | சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| | | | | |

7.

| | |
|---|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் | |
| திகதி | |
| கட்டணம் செலுத்திய மாவட்ட/பிரதேச செயலகம் | |
| செலுத்திய தொகை | |

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழன்றுவிடாதபடி இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிய நேர்ந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்றபின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் இப்பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளை ஏற்று நடக்க இணங்குகின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

*9.* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................................. எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் ........................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்.)
திகதி :————.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேற்கூறிய விண்ணப்பதாரி இப்பரீட்சையை எழுதுவதற்குத் தகுதியுள்ளவர்/தகுதியற்றவர் என உறுதிப்படுத்துகின்றேன்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :————.

7-635

---

## சூழல், இயற்கை வளங்கள் அமைச்சு

வனத் திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவைகளின் பயிற்சித் தரத்தில் வட்ட வன அதிகாரி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

வனத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவைகளின் பயிற்சித்தரத்தில் வட்ட வன அதிகாரி பதவிக்கு வேண்டப்படும் தகைமை கொண்டிருக்கும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* **சம்பள விகிதம் :**

(1) பயிலுனர் தரம் : (MN1 – 2006ஏ – பொது நிருவாக சேவை சுற்றறிக்கை 6/2006 (iv) பிரகாரம்) - ரூபா 13,120 – 145 x 1 - ரூபா 13,265.

(2) வகுப்பு II 'ஆ' : (MN3 – 2006எ – பொது நிருவாக சேவை சுற்றறிக்கை 07/2008 (iv) பிரகாரம்) - ரூ. 15,005 – 180 x 4 – 240 x 6 – ரூபா 17,165.

*3.* **பணிக்கமர்த்தும் நியதிகள், சேவை நிபந்தனைகள்.**- (i) இந்நியமனம் நிரந்தரமானது. விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவித்தொகை வழங்குதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்தினைக் கொண்டதாகும்.

(iii) பயிலுனர் தரத்திற்கு இந்நியமனம் சேர்த்துக்கொள்ளப்படும்.

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நாட்டின் எந்தப் பகுதியிலுமுள்ள எந்தவொரு காட்டுப் பகுதியிலும் பணி புரிவதற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும். அத்துடன் பகல் வேளையிலும் இரவு வேளையிலும் பணி புரிவதற்கும் அவர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

(v) இலங்கை தொழில்நுட்பவியல் சார் சேவைகளின் பிரமாணக் குறிப்புகளில் அதிகாரிகள் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்ச்சி தொடர்பாக குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவைகளின் பிரமாணக் குறிப்புகளில் வட்ட வன அதிகாரிகள் ஆட்சேர்ப்பு மற்றும் உயர்ச்சி தொடர்பான (திருத்த) நிபந்தனைகள் ஏற்புடையதாக அமையும்.

(vi) வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருந்தக்கூடிய பொது நிபந்தனைகளுக்கும் ஏற்புடையதாக அமையும்.

(vii) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பரீட்சை நடாத்தப்படும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க மற்றும் மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதின் மேலெல்லை ஏற்புடையதாகாது.)

5. **கல்வித் தகைமைகளும் மற்றைய தகைமைகளும்**.- எல்லா விண்ணப்பதாரிகளும் கீழே தரப்பட்டுள்ள தகைமைகளை திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் அல்லது விவசாயவியல் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) தாவரவியல், விலங்கியல் அல்லது விவசாயவியல் உட்பட இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், தூய கணிதம் அல்லது கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட நான்கு (04) திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் (06) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) ஆண் விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் 5 அடி 2 அங்குலம் உயரத்தையும் 32 அங்குல மார்பளவையும் கொண்டவர்களாகவும் பெண் விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் 5 அடி உயரத்தைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(vi) நல்லொழுக்கம் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்க்கும் முறை**.- (i) பந்தி 05 இன் பிரகாரம் தகைமைகளை பூர்த்திசெய்பவர்களும் எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கும் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் தேர்வு மேற்கொள்ளப்படும். (நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டா.)

(ii) பந்தி 06 (i) இன் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிலுனர் தரத்தில் வைக்கப்படுவர். இலங்கை வனவியல் கல்லூரியில் இரண்டு வருட கோட்பாடு மற்றும் செய்முறைசார் பயிற்சிநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததின் பின் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவைகளின் வகுப்பு II 'ஆ' இற்கு உள்ளீர்க்கப்படுவர்.

(iii) இலங்கையில் ஏதாவது அரச சார்பு நிறுவனமொன்றில் விவசாயவியலில் இரு வருட டிப்ளோமாவை வெற்றிகரமாகப் முடித்துக்கொண்ட விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவைகளின் வகுப்பு II 'ஆ' இற்கு நியமிக்கப்படுவர்.

(iv) 6 iii இன் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கை வனவியல் கல்லூரியில் இரண்டு வருட கோட்பாடு மற்றும் செய்முறைசார் பயிற்சிநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வது கட்டாயமாகும்.

7. **எழுத்துப் பரீட்சை**.- கல்லூரி தகைமைகளைப் பெற்றுக்கொண்ட மொழியில் விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும். எழுத்து பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

(i) நுண்ணறிவு பரீட்சை (உளச்சார்பு) (ஒரு மணித்தியாலம் (01) – 100 புள்ளிகள்.
விண்ணப்பதாரியின் எண்ணியலான ஆற்றல், தர்க்க ஆற்றல், பகுப்பாய்வு தகுதி மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் போன்றவைகளை மதிப்பீடு செய்யும் வண்ணம் இந்த வினாத்தாள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பல்லின தேர்வு வினாக்கள் மற்றும் சிறு விடை வினாக்களையும் கொண்டிருக்கும்.

(ii) தொழில்நுட்ப பரீட்சை (இரண்டு மணித்தியாலம்) (02) - 100 புள்ளிகள்.
பின்வரும் விடயங்களில் விண்ணப்பதாரரின் அறிவினை பரீட்சித்துப் பார்ப்பதற்காக கட்டமைப்பு மற்றும் பகுதி கட்டமைப்புசார் வினாக்களைக் கொண்டிருக்கும் :-

(அ) இலங்கை – அதன் புவியியல் அமைப்பு மற்றும் காலநிலை
(ஆ) சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு மற்றும் வனத் திணைக்களம் ஆகியவற்றின் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள்
(இ) வன வளங்களின் முகாமைத்துவமும் பயன்பாடும்

(ஈ) வனவியலும் சூழலும் - இலங்கை விலங்கினம் மற்றும் தாவரம்

(உ) வனம் மற்றும் சமூகத்திற்கிடையிலான உறவு

(ஊ) அடிப்படை தாவரவியல் மற்றும் புவியியல்

(எ) பொது அறிவு

8. **விண்ணப்பங்களும் ஏனைய தகவல்களும்**.- (i) இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் 21 x 29 செ. மீ. (A4) கடதாசியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு 2008, ஓகத்து 31 ஆந் தினத்தில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் ''பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்புமுறை மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி எண் 1503, கொழும்பு'' என்னும் முகவரிக்குப் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பப்பட வேண்டும். (ஏதேனும் பிரத்தியேக விலாசத்திற்கு அல்லது வேறு விலாசத்திற்கு அனுப்பப்படலாகாது. அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''வட்ட வன அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு – 2008'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) தபாலில் இல்லாமற் போகும் விண்ணப்பங்களுக்கு பொறுப்புக் கூறப்படாது.

(iv) விண்ணப்பதாரிகளின் கையொப்பம் பின்வரும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், தரைப்படை, கடற்படை, விமானப்படை அல்லது காவல்துறையைச் சேர்ந்த அதிகாரம் கொண்ட அதிகாரி ஒருவர் அல்லது தேசிய அல்லது மாகாண சபையின் நிரந்தர மேலதிகாரி ஒருவர் அல்லது விண்ணப்பதாரர் வசிக்கும் இடத்தின் கிராம சேவையாளர் பிரிவின் கிராம சேவையாளர் ஆகியோர்.

(v) இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அனுகூலமாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vi) தேசிய அல்லது மாகாண சபை அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க சம்மதிக்கிறேன் என்ற தலைவரின் உறுதிமொழியுடன் தங்களது விண்ணப்பங்களை அவர்களது நிறுவனங்களின் தலைவர் ஊடாக அனுப்பவேண்டும்.

(vii) விண்ணப்பங்கள் கிடைத்தது என்று அறிவிக்கப்பட மாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணங்கள்**.- (i) பரீட்சைக் கட்டணம் ரூபா 300. அண்மையில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இத்தொகையைச் செலுத்தி ''வன பாதுகாவலர் நாயகத்தின் பொது வைப்பில்'' முதலீடு செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ள இடத்தில் பற்றுச்சீட்டு ஒட்டப்படல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பதாரர் எடுத்துவைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறது.)

(ii) பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாது அத்துடன் வேறேதேனும் பரீட்சைக்கு அது கட்டணமாக மாற்றப்பட மாட்டாது.

10. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களில் எல்லாவற்றையும் அல்லது ஏதேனும் ஒரு ஆவணத்தை எந்நேரத்திலும் தேவைப்படும்போது சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்வித் தராதரச் சான்றிதழ் ;
(iii) பிரதேச செயலாளரினால் உறுதிசெய்யப்பட்ட கிராமசேவையாளரிடமிருந்து அண்மையில் பெறப்பட்ட சான்றிதழ் ;
(iv) இரண்டு ஒழுக்கச் சான்றிதழ்கள் ;
(v) வேறு ஏதேனும் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள்.

**தயவுசெய்து கவனிக்கவும்**.- ஆவணங்கள் அல்லது ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகாது.

11. (i) பரீட்சை பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும் :-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கொழும்பு | 2. கண்டி | 3. மாத்தறை | 4. குருநாகல் | 5. இரத்தினபுரி | 6. அனுராதபுரம் |
| 7. பதுளை | 8. அம்பாறை | 9. மட்டக்களப்பு | 10. திருகோணமலை | 11. வவுனியா | 12. யாழ்ப்பாணம் |
| 13. கிளிநொச்சி | 14. முல்லைத்தீவு | | | | |

(ii) மேற்கூறப்பட்ட நிலையங்களில் எவற்றுக்கேனும் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து விண்ணப்பதாரர்கள் அருகாமையிலுள்ள நிலையங்களுக்கு அனுப்பப்படுவர்.

(iii) பரீட்சைத் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக பரீட்சை நடாத்தப்படும் இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றை குறிப்பிட்டு நுழைவுக் கடிதம் அனுப்பப்படும். பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு ஏதேனும் செலவுகளோ இவ்விடயத்திற்காக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. நுழைவுக் கடிதம் அனுப்புவது பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதாக கருதப்படக் கூடாது.

12. **விண்ணப்பதாரரின் அடையாளம்.**- விண்ணப்பதாரர்கள் தங்களது அடையாளத்தை பரீட்சையாளர்களிடம் திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும். பின்வருவனவற்றில் ஏதேனும் ஆவணங்கள் இவ்விடயத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. **தவறான தகவல் வழங்குவதற்கான தண்டனைகள்.**- விண்ணப்பதாரர் தகைமை கொண்டவரல்லர் எனக் காணப்பட்டால் அவரது விண்ணப்பம் எந்நேரத்திலும் இரத்துச் செய்யப்படும். அவரது அறிவுக்கு ஏற்ப விண்ணப்பதாரரினால் வழங்கப்படும் விடயங்கள் ஏதேனும் பிழையானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது அவர் முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மாற்றியிருந்தால் அவரது தெரிவுக்குப் பின் அரசாங்க சேவையிலிருந்து அவர் நீக்கம் செய்யப்படுவார்.

14. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் வன பாதுகாவலர் நாயகத்தின் தீர்மானத்தின்படி மேற்கொள்ளப்படும்.

———,
வன பாதுகாவலர் நாயகம்.

வனத் திணைக்களம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2008, யூலை 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வனத் திணைக்களம்**

வனத் திணைக்களத்தின் பயிலுனர் வட்ட வன அதிகாரி பதவி - 2008

நகர இல. : [ ]
நகரம் :............................
அறிவித்தலின் பந்தி II ஐப் பார்க்கவும்.

1. (i) முதல் எழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கிலத்தில்) :———.
   (ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :———.

2. நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :———.

3. பால் :
   ஆண்-0, பெண்-1 — தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும். [ ]

4. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி :—
   சிங்களம்-சி, தமிழ்-த, ஆங்கிலம்-ஆ — தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும். [ ]

5. இலங்கைப் பிரஜையா ? :———.
   வம்சாவளியினால்-1, பதிவினால்-2 — தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும். [ ]

6. பிறந்த திகதி :———.

   2008.07.31 இல் வயது :-

   வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் [ | ]

7. தேசிய ஆளடையாள அட்டை இல. : [ | | | | | | | | | ]

8. பௌதீக தேவைகள் :

   உயரம் :- ——— அடி ——— அங்குலம் ———

   மார்பளவு :——— அங்குலம் (பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதல்ல)

9. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சாதாரண தரம்) :

1 ஆவது அமர்வு

ஆண்டு :———. சுட்டிலக்கம் :———.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2 ஆவது அமர்வு

ஆண்டு :———. சுட்டிலக்கம் :———.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) க. பொ. த. (உயர் தரம்)

ஆண்டு :———. சுட்டிலக்கம் :———.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

10. மேலதிக கல்வித் தகைமைகள் :———.

11. தொழில்துறை/ஏனைய தகைமைகள் :———.

12. (i) நீர் நீதிமன்றத்தால் ஏதேனும் குற்றத்திற்காக குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவரா ?
(ஆம்/இல்லை) :———.

(ii) ஆம் எனில், விபரங்களைத் தரவும் :———.

13. நீர் ஏற்கனவே சேவையில் கடமையாற்றின் விபரங்களைத் தரவும் :

பதவி :———. நிறுவனம் :———.

முதல் நியமனத் திகதி :———. சம்பளம் :———.

14. உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்களைத் தரக்கூடிய உமக்கு சொந்தமற்ற இருவரின் பெயர்களைக் குறிப்பிடவும் :

(i) :——————————————————————.
(ii) :——————————————————————.

15. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று தெரிவு செய்யப்படுவதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்தின் பின் காணப்படின் எவ்வித நட்டஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

16. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ........................................................................ அவர்களை எனக்கு நேரிடையாகத் தெரியும் என்றும் 2008, ......................................................................... திகதி இவ்விண்ணப்பத்தில் அவர் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

———,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :———.
பதவி :———.
விலாசம் :———.
திகதி :———.

17. **விண்ணப்பதாரர் தேசிய அல்லது மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றுபவராயின் இந்தப் பகுதி நிறுவனத் தலைவரால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.**

விண்ணப்பதாரர் திரு./திருமதி/செல்வி ................................................................................... அமைச்சில்/திணைக்களத்தில் ...................................................................................... பதவியினை வகிக்கும் நிரந்தர/தற்காலிக ஊழியர் ஒருவர் எனவும் அவர் கொடுத்திருக்கும் விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன். விண்ணப்பதாரர் இப்பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

———,
திணைக்கள தலைவரின்/அதிகாரமளிக்கப்பட்ட
அதிகாரியின் கையொப்பம்.

திகதி :———.

தயவுசெய்து தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்.

**தயவுசெய்து கவனிக்கவும்.**- பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டைத் தவிர்த்து வேறு ஆவணம் எதுவும் விண்ணப்பத்தில் இணைக்கப் படலாகாது.

18. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :———.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :———.

| |
|---|
| பெட்டிக்குள் பற்றுச்சீட்டை உறுதியாக ஒட்டவும் |

7-641

## கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2008

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2-11 தரத்தின் உத்தியோகத்தர்களது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை நவெம்பர் மாதம் 2008 இல் கொழும்பில் நடைபெறும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் பரீட்சை நடைபெறுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

2. இப்பரீட்சைக்கு உரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1070/13, 1999 மாச்சு மாதம் 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக அப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர் ஒருவருக்கு இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரு தடவையில் அல்லது தனித்தனியான தடவைகளில் தோற்ற முடியும்.

***பாடவிதானம்***

| தொடர் இல. | பாடம் | புள்ளி | காலம் |
|---|---|---|---|
| (01) | பொது முகாமைத்துவம் மற்றும் தாபன செயற்பாடுகள் தாபன விதிக் கோவையின் i, ii, iii, iv, v, vii, viii, ix, xii, xiii, xiv, xxiv, xxviii, xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் தாபன விதிக்கோவையின் சட்டம் | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| (02) | நிதி ஒழுங்குக் கோவை அரச நிதிக்கோவையின் I ஆம் பகுதியின் i, ii,v, viii, xii மற்றும் xiv வாசகத்திற்கு விசேட கவனத்துடன் | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| (03) | கல்விச் சட்டம் பரீட்சார்த்திகள் கீழ் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பான விளக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. | 100 | 2 மணித்தியாலம் |

(i) 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்வியியலாளர் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்படும் கோவைகள்.
(ii) 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்.
(iii) 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டம்.
(iv) 1976 ஆம் ஆண்டின்15 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சைகள் (மறுசீரமைப்பு) சட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம்.
(v) 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்.
(vi) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்.
(vii) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்வி நிறுவகச் சட்டம்.
(viii) 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கல்வி ஆணைக்குழுச் சபைச் சட்டம்.
(ix) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபைச் சட்டம்.
(x) 13 ஆவது மறுசீரமைப்புச் சட்டம் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக 3 ஆவது வாசகத்துக்குரிய விசேட கவனத்துடன் இலங்கை அரசியலமைப்பு.
(xi) கல்விக்குரிய மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள கொள்கைப் பிரகடனம்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியினால் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளைப் பெறவேண்டும்.

3. **பரீட்சையின் மொழிமூலம்**.- (i) பரீட்சார்த்திக்கு அரசமொழி அல்லது தேசிய மொழி ஆகியவற்றில் ஒன்றின் மூலம் பதில் எழுத முடியும்.

(ii) பரீட்சார்த்தி அரச சேவைக்கு நுழைய முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சையில் மொழி அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரசசேவையில் இணைத்துக்கொண்டவர்கள் தொடர்பாக அரச சேவைக்குப் பிரவேசிக்க தகைமைபெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் பதிலளிக்க வேண்டும்.

4. பரீட்சார்த்தி தமக்கு உரிமையற்ற மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாக தெரியவருமிடத்து அவரை பரீட்சார்த்தி நிலையிலிருந்து இரத்துச்செய்ய முடியும்.

5. விண்ணப்பப்படிவம் கீழ்க் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சகல தலைப்புக்களும் முதலாம் பக்கத்தில் அமையக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதவேண்டும். விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக இருப்பதுடன் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் வினவ வேண்டியதுடன் அவ்வாறு இல்லாதபட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்களமொழி மூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவேண்டும்.

6. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும்.

7. விண்ணப்பப்படிவங்கள் 2008.08.29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கல்வியியலாளர் சேவையின் 2-11 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை" எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

8. ஏதாவது ஒரு பரீட்சார்த்தி 7 நாட்களுக்கு முன்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அவர் தாமதமின்றி பத்தரமுல்லை, பெலவத்தை, பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். (தந்தி – பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டியதுடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகவல்களையும் வழங்க வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காதபட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் நிதி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு வழங்குவது மிகவும் பயன்மிக்கதாக அமையும்.

(i) பரீட்சையின் பெயர்,

(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர்,

(iii) பரீட்சார்த்தியின் சொந்த முகவரி,

(iv) விண்ணப்பப்படிவம் தபாலில் இட்ட திகதி
(பதிவு இலக்கம் மற்றும் தபால் அலுவலகம்)
அண்மையில் உள்ளவர்கள் உதவியாளர் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள மற்றும் பரீட்சைக் கிளைக்கு (E-BLOCK) அறிவிக்க முடியும்.

9. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிறைவுசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

10. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிசெய்வது பரீட்சார்த்தியின் கடமையாக இருப்பதுடன் அதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் எதையேனும் சமர்ப்பிக்க முடியும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை,

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. இப்பரீட்சைக்குத் தோற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட 3 அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

(அ) முதலாவது தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுபவரிடம் முழுவதற்குமான அல்லது ஒரு பகுதிக்காக கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

| | | ரூபா |
|---|---|---|
| (ஆ) முழுமையான பரீட்சைக் கட்டணம் | - | 150 |
| ஒரு பாடத்திற்கு | - | 50 |

பரீட்சார்த்திகளினால் ஒப்பமிட்டு உரியவாறு இரத்துச் செய்வதன் மூலம் வருமான முத்திரை ஊடாக கட்டணம் செலுத்த வேண்டும்.

எம். எம். என். டீ. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2008.07.01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

இலங்கை கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை – 2008

Efficiency Bar Examination in Class 2 Grade II of Sri Lanka Teacher Educators' Service - 2008

விண்ணப்பப்படிவத்தை "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு நிறுவனத் தலைவரூடாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். (தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பரீட்சையின் பெயர்' குறிப்பிடப்படல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

1. (அ) முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உ-ம் : Mr./Mrs./Miss SILVA, A.B.

(ஆ) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2. பிறந்த திகதி :-----.

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3. (i) பதவிப் பெயர் :-
(ii) சேவையாற்றும் கல்விக் கல்லூரி/ஆசிரிய மத்திய நிலையம் மற்றும் முகவரி :-----.
(அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

4. சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

5. அறிவித்தலின் 3 ஆம் வாசகத்தின் (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடங்களுடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-

| பாட இலக்கம் | பாடத்தின் பெயர் |
|---|---|
| 1.<br>2.<br>3. | |

6. இதற்கு முன்னர் பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதில் ஒரு பகுதிக்கு தோற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் பாடங்கள் மற்றும் தோற்றிய ஆண்டு மற்றும் மொழியினைக் குறிப்பிடுக :-

| பாடங்கள் | ஆண்டு | மொழி |
|---|---|---|
| ................................<br>................................ | ................................<br>................................ | .............................<br>............................. |

7. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :-----.

| முத்திரையை இங்கே ஒட்டவும் |
|---|

(உரிய கட்டணத்திற்காக முத்திரையை ஒட்டி அதன் மேல் விண்ணப்பதாரி ஒப்பமிட்டு இரத்துச் செய்யவும்)

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானதென்றும், வர்த்தமானி அறிவித்தலில் 3 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை இருப்பதாகவும் உறுதி செய்கிறேன். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்பட இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்.

முன்வைக்கப்படுகிறது :

இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது வாசகத்திற்கமைய அவரினால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமை பெற்றுள்ளார் என்றும் உறுதி செய்கிறேன்.

2. பரீட்சார்த்தி முத்திரையை உரியவாறு செல்லுபடியற்றதாக்கியுள்ளதாக உறுதிசெய்கிறேன்.

.......................................................
பீடாதிபதி/ஆசிரிய மத்திய நிலையத்தின்
பொறுப்பாளரின் கையொப்பமும் பதவியும்.

திகதி :-----.

7-565

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.